# மலையகச் சிறுகதைப் பரப்பில் மாத்தளை மலரன்பன் சித்திரிக்கும் படைப்புவெளிகள்

- பெருமாள் சரவணகுமார் –
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.
sarawanan480@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கைத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் மலையகச் சிறுகதை வரலாறு ஓர் உபபண்பாட்டுக் கூறாக இருந்துவருகின்றது. அவ்வாறு அமைவுபெறுவதற்கு அது தனக்கெனத் தனித்துவமான பண்புகளைக் கொண்டதாகவும், குறிப்பிடத்தக்களவு சிறுகதைகளை உள்ளடக்கியதாகவும் விளங்குகின்றமை முக்கியமான காரணமாகும். மலையகச் சிறுகதைகள் என்ற பொதுத்தளத்தில் அவற்றைச் சுட்டினாலும் அதற்குள்ளும் பல பிராந்திய அடையாளங்கள் முனைப்புப் பெற்றுள்ளன. ஒவ்வொரு பிராந்தியமும் சில தனித்துவமான வாழ்வியில் முறைகளையும் புவியியல் அமைப்பினையும் கொண்டுள்ளது. இவற்றுள் மாத்தளைப் பிராந்தியம் பல வகையிலும் தனித்துவம் பெற்று விளங்குகின்றது. இப்பிராந்தியத்திலிருந்து மேற்கிளம்பிய புதைகதை ஆசிரியர்களுள் மலரன்பன் மிக முக்கியமானவர். இதுவரைக்கும் அவரது கோடிச்சேலை, பிள்ளையார் சுழி ஆகிய இரு சிறுதைத் தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. இத்தொகுப்புக்களில் மொத்தமாக இருபத்துநான்கு கதைகள் உள்ளன. இத்தொகுப்புக்களூடாக மலரன்பன் சித்திரித்துக்காட்டும் புதிய படைப்புவெளிகள் குறித்து விரிவான ஆய்வுகள் நிகழ்த்தப்பட வில்லை. அவ்வகையில், மலரன்பனின் சிறுகதைகளில் இடம்பெறும் புதிய படைப்புவெளிகள் யாவை என்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மலரன்பனின் இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களிலும் காணப்படுகின்ற கதைகளை முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு, உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையியலில் இவ்வாய்வு அமைகின்றது. மலரன்பனின் சிறுகதைகள் பல்வேறு பொருண்மைகளில் இயக்கம் கொள்கின்றன. மாத்தளைப் பிராந்தியத்துக்கேயுரிய றப்பர் தோட்ட உற்பத்தி முறைகளையும் அவ்வுற்பத்தி முறைகள் தோற்றுவிக்கின்ற வாழ்வியல் சிக்கல்களையும் சிறுகதைகளாகக் கொண்டு வந்தவர்களுள் மலரன்பன் தனித்துவமானவர். றப்பர் தோட்ட வாழ்க்கை முறைக்குள் காணப்படும் அதிகார முகங்களையும் அடக்குமுறைகளையும் சிறுகதைகளில் பதிவுசெய்தவராக மலரன்பன் காணப்படுகின்றார். இலங்கையில் மிக நீண்ட காலமாக நிலவிய இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் மலையக மக்களை எவ்வாறெல்லாம் பாதித்தன என்பதை சித்திரிக்கும் பல கதைகளை எழுதியவர்களுள் மலரன்பனும் ஒருவர். அவரது தார்மீகம், நந்தாவதி, தமிழச்சாதி முதலான கதைகள் இவ்வகையில் சுட்டிக்காட்டத்தக்கவை. பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் வாழ்ந்துவந்த பெருந்தோட்ட மக்கள் இனவன்முறைகள் நிகழ்ந்த காலப்பகுதிகளில் எவ்வாறெல்லாம் தாக்கப்பட்டார்கள் என்பதே இக்கதைகளின் உள்ளீடாக அமைந்துள்ளது. மேலும், சிங்கள கொலனிகளில் வேலையும் பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் மலரன்பன் சிறுகதைகளாக்கியுள்ளார். இவற்றோடு, பெருந்தோட்டத்துறைக்குள்ளிருந்து மத்தியக் கிழக்கு நாடுகளுக்குச் சென்ற பெண்கள் அங்கு எதிர்நோக்குகின்ற வாழ்வியல் சிக்கல்களையும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் தமது கதைகளில் பதிவுசெய்கின்றார், மலரன்பன். இவ்வகையான கருப்பொருட்களும் கதைநிகழும் இடமுமே மலரன்பன் என்ற புனைகதையாசிரியரின் தனித்துவ அடையாளமாகவும் அமைகின்றது எனலாம்.

**திறவுச்சொற்கள்** : மலையகம், சிறுகதை, படைப்புவெளி, மாத்தளைப் பிராந்தியம், இனமுரண்பாடு.

## I. அறிமுகம்

இலங்கைத் தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் மலையகச் சிறுகதைகள் ஓர் உபபண்பாட்டுக் கூறாக இருந்து வருகின்றது. இக்கதைகள் பெருந்தோட்ட உற்பத்திமுறைகளைப் பின்புலமாகக் கொண்டு அமைந்துள்ளன. மலையகச் சிறுகதைகள் என்ற

பொதுத்தளத்தில் அவற்றைச் சுட்டினாலும் அதற்குள்ளும் பல பிராந்திய அடையாளங்கள் மேற்கிளம்பியுள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. ஒவ்வொரு பிராந்தியமும் தனித்துவமான வாழ்வியல் கூறுகளையும் கொண்டுள்ளது. அவ்வகையில், மலையகச் சிறுகதைப் பரப்பில் பதுளைப் பிராந்தியக் கதைகள், சப்ரகமுவப் பிராந்தியக் கதைகள், மாத்தளைப் பிராந்தியக் கதைகள், கண்டிப் பிராந்தியக் கதைகள், நுவரெலியா பிராந்தியக் கதைகள் என்ற ரீதியிலான வகைப்பாடுகள் மேலெழுவதற்கும் காரணமாயின. அவ்வாறு பகுத்து நோக்குவதற்கான சிறுகதைப் பரப்பையும் படைப்புவெளியையும் கொண்டிருக்கின்றன. இந்தப் பிராந்திய அடையாளங்களை உருவாக்கும் பிரதான அம்சமாக அமைவது கதாசிரியர்கள் சித்திரிக்கும் சமூகச் சூழலே எனலாம். இந்த சமூகச் சூழல் பற்றிய சித்திரிப்பே ஒவ்வொரு கதாசிரியரினதும் படைப்பாளுமையைக் காட்டிவிடுகின்றன. இவ்வகையான பிராந்திய அடையாளங்களை மலையகச் சிறுகதைவெளியில் மிக அழுத்தமாகப் பதிவுசெய்த பிராந்தியங்களுள் மாத்தளைப் பிராந்தியக் கதைகள் தனித்துவம் பெறுகின்றன. மாத்தளைப் பிராந்தியத்திலிருந்து முகிழ்ந்த ஒருசில படைப்பாளிகள் இந்தப் பிராந்திய அடையாளத்தைத் தமது படைப்புவெளிக்குள் கொண்டு வந்திருக்கின்றார்கள். மாத்தளைப் பிராந்தியத்தின் வாழ்வியலை புனைகதை வெளிக்குள் சித்திரித்துக் காட்டியவர்களுள் மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன், மலரன்பன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மலையக இலக்கிய வரலாற்றில் மாத்தளைப் பிராந்தியத்தின் மண்மணத்தைக் கமழவிட்டவர்களாக இவர்களைச் சொல்லலாம். இவர்களது புனைகதை எழுத்துக்களே இந்த அடையாள உருவாக்கத்திற்கான சான்றுகளாகவும் அமைகின்றன. அவ்வகையில், மாத்தளை சோமுவின் அவன் ஒருவனல்ல (1989), நமக்கென்றொரு பூமி (1984), அவள் வாழத்தான் போகிறாள், அந்த உலகத்தில் இந்த மனிதர்கள், எல்லைத்தாண்டா அகதிகள், கண்டிச்சீமை (2017) முதலானவைகளும், மாத்தளை வடிவேலனின் கதைகள், மாத்தளை கார்த்திகேசுவின் வழி பிறந்தது முதலான புனைகதைப் பிரதிகள் மலையக இலக்கியப் பரப்பில் மாத்தளைப் பிராந்தியத்தின் வாழ்வியல் கோலங்களைப் பதிவுசெய்வனவாக அமைகின்றன. தமிழ்ச் சிறுகதை உலகில் மாத்தளைப் பிராந்தியக் கதைகளை படைத்தவர்களில் மலரன்பன் தனித்துவமானவர். மலையக இலக்கியப் பரப்பில் மலரன்பனின் படைப்புலகம் பல்வேறு வகைப்பட்டது. சிறுகதையாசிரியர், மெல்லிசைப் பாடலாசிரியர், தொகுப்பாசிரியர், மொழிபெயர்ப்பாளர் முதலான தளங்களில் இயங்கி வருபவர். இவ்வாறு பல துறைகளில் இயங்கி ஒவ்வொரு துறையிலும் தமது இலக்கிய முகத்தைக் காட்டினாலும் அவரது தனித்துவமான ஆளுமை அவரது சிறுகதைகளிலேயே வெளிப்படுகின்றது எனலாம். அதற்கான அடிப்படைக் காரணம் அவரது சிறுகதைகளின் படைப்புவெளியும், கதைசொல்லும் முறைமையும் ஆகும். இதுவரைக்கும் அவரது கோடிச்சேலை (1989), பிள்ளையார் சுழி (2008) ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. மலரன்பனின் இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களிலும் காணப்படுகின்ற அக்கினிக் குஞ்சுகள், கோடிச்சேலை, இலையுதிர் காலத்து மரங்கள், தார்மீகம், சாமிவரம், தமிழச்சாதி, நந்தாவதி, பாலைவனம் ஆகிய கதைகளை முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு, உள்ளடக்கப் பகுப்பாய்வு முறையியலில் இவ்வாய்வு அமைகின்றது..

மலரன்பன் கதைகளில் உள்ளீடாக அமைந்துள்ள பாடுபொருள் அடிப்படையில் அவரது கதைகளைப் பின்வருமாறு பகுத்து நோக்கலாம்.

### II. றப்பர் தோட்ட வாழ்க்கை முறையும் சிறுகதை ஆக்கமும்

பெருந்தோட்டத்துறையின் பொருளாதார நடவடிக்கைகளில் தேயிலை, கோப்பி, றப்பர் முதலான பயிர்ச்செய்கைகள் முதன்மையான இடத்தைப் பெற்றுவருகின்றன. இம்மூன்று தொழில்முறைகளும் தோற்றுவித்த வாழ்வியல் முறைகள் மலையகச் சமுதாயத்தின் அசைவியக்கத்தில் பெறும் மாற்றங்களை ஏற்படுத்தின. ஒவ்வொரு தொழில் முறையும் தமக்கேயுரிய தனித்துவமான தொழில் முறைகளையும், அதிகார அடக்குமுறைகளையும் கொண்டுள்ளது. தேயிலைத் தோட்டத்தில் தொழில் புரிபவர் எதிர்கொள்ளும் சவால்களுக்கும், றப்பர் தோட்டத்தில் தொழில் புரிபவர் எதிர்கொள்ளும் சவால்களுக்கும் நிறையவே வேறுபாடுகள் உண்டு. இதற்கு அடிப்படைக்காரணம் அவ்வவ் தொழில்முறைகளின் கட்டமைப்புகளே ஆகும். மலையக இலக்கிய வரலாற்றில் தேயிலைத் தோட்ட மக்கள் பற்றி வந்த இலக்கியப் பதிவுகள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவு வெளிவந்துள்ளன. ஆனால், பெருந்தோட்டத்துறைக்குள் காணப்படும் றப்பர் தோட்ட மக்கள் பற்றிய இலக்கியப் பதிவுகள் மிகமிகக் குறைவே எனலாம். ஒருசில புனைகதை ஆசிரியர்களே றப்பர் தோட்டத்தில் தொழில் புரியும் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் சவால்களையும் கதைகளாக்கி யுள்ளனர். அந்த ஒருசிலருள் மலரன்பன் மிக முக்கியமானவர். அவரது கோடிச்சேலை, பெரியதம்பியின் புள்ளி ஆடு, இலையுதிர் காலத்து மரங்கள் முதலான கதைகள் றப்பர் தோட்ட வாழ்வுமுறையைச் சித்திரிப்பனவாக அமைந்துள்ளன. றப்பர் தோட்டத்தில் தொழில் புரிபவர்களின் அவல வாழ்வு இக்கதைகளில் பதிவுசெய்யப்படுகின்றது. குறிப்பிட்ட வயது வரைக்கும் றப்பர் தோட்டத்தில் வேலை செய்தவர்கள் தமது சேவைக்காலம் முடிந்த பிறகு தங்குவதற்குக்கூட இடமில்லாமல் தத்தளிக்கும் நிலையை கோடிச்சேலை என்ற கதை வெளிப்படுத்துகின்றது. கோடிச்சேலைக் கதையில் நடமாடும் நடேசன், அஞ்சலை, சாமிக்கிழவி முதலான பாத்திரங்கள் வறுமையின் கொடுமையினால் தவிக்கின்றார்கள். இவர்கள் அனுபவிக்கும் வறுமை அவர்களே உருவாக்கிக் கொண்டதுமல்ல. அவர்கள் வாழுகின்ற சமுதாயச் சூழலே அதற்கு அடிப்படையாக அமைகின்றது. ‘மூணு நாளா அன்னந் தண்ணி ஆகாரமில்லாம கெழவி பெனத்திட்டு கெடந்திருக்கா. ஒரு பிடி சோறு குடுக்க நாதியில்ல. பட்டினி தான் கெழவிய கொன்னுபுடிச்சி’ (மலரன்பன், 1989: 20) என்று கதாசிரியர் கூறுவதும், சாமிக்கிழவிக்குப் போட்ட கோடிச்சேலையைக் கட்டிக்கொண்டு அஞ்சலை நிற்பதும், இலையுதிர்காலத்து மரங்கள் கதையில் ‘மூனு நாளா பட்டினி கெடந்த பனிய லயத்து கறுப்பையாவுட்டு புள்ளைக ரெண்டு பசி தாங்க ஏலாம நேத்து காட்டுக்குபோய் என்னமோ காய்களை புடுங்கி தின்னுருக்குக நேத்து அந்திக்கு ரெண்டு புள்ளைக்கும் வாந்தியும்

வைத்தாலையும் போயிருக்கு. விடிஞ்சதும் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகலாமின்னு என்னமோ கைமருந்து குடுத்திருக்காங்க. நடுச்சாமத்தில் மூத்தது செத்துப்போச்சு. மத்தது அந்தா இந்தான்னு இழுத்துக்கிட்டு இருக்கு… (மேலது, 32) என்று சித்திரிப்பதும் தற்செயல் நிகழ்வல்ல என்பதை மலரன்பன் பதிவுசெய்கின்றார்.

றப்பர் தோட்ட வாழ்வியலை தமிழ்ச் சிறுதைவெளிக்குள் மிக அலாதியாகக் கொண்டுவந்தவர், மலரன்பன். அவரது கதைகளில் இடம்பெறும் மேல்வரும் சித்திரப்புக்களே இதற்கு நல்ல உதாரங்களாகவும் அமைகின்றன:

"றோட்டின் இருமருங்கிலும் இலவம்பஞ்சு மரங்கள் வரிசையாய் அணிவகுத்து நிற்க, பஞ்சு மரங்களில் பற்றிப் படர்ந்துள்ள மிளகுக் கொடிகளில் சடை சடையாக மிளகுக் கதிர்கள் நிறைந்திருக்கின்றன. இறப்பர் மரங்களிடையேயுள்ள கோப்பி மரங்களில் மல்லிகைப் பூக்களைப் போல பூத்துக் குலுங்கும் கோப்பிப் பூக்களின் வாசம் கம்மென்று வீசுகிறது." (மேலது, 52)

"பத்தாம் நம்பர் மலையிலுள்ள – வாளி வாளியாக இறப்பர் பாலைச்சுரந்த மரங்கள் - காயப்படாமல் வெட்டு சீவி, மண்பூசி மருந்து பூசி கெந்தகம் தெளித்து என்றெல்லாம் பாதுகாக்கப்பட்ட மரங்கள் கிழடு தட்டிப்போனதால் விறகுக்காக வேரோடு வெட்டப்படுகின்றன. பால் சுரக்காத பசுமாட்டை இறைச்சிக்காக வெட்டுவது போல!" (மேலது, 53)

'பால்வாளி தலையிலும், ஒட்டுப்பால் குட்டிச்சாக்கு தோளிலுமாக ஸ்டோருக்கு ஆண்களும் பெண்களுமாய் மண்றோட்டில் திரும்பிக் கொண்டிருந்தவர்களுக்கு மலையில் ஐயாவந்து கொண்டிருப்பது தெரிகின்றது.' (மேலது).

இவ்வகையான சித்திரிப்புக்கள் தமிழ்ச் சிறுகதைவெளிக்கும் புதுமையானவை. புதிய படைப்புவெளியைத் திறந்துவிடுபவை எனலாம். றப்பர் தோட்டத் தொழில் முறைகள் பற்றியும், அத்தொழில் முறைக்குள் காணப்படும் அதிகார முகங்கள் பற்றியும், அத்தொழில் முறைக்குள் காணப்படும் முரண்பாடுகள் குறித்தும் மிக அழுத்தமாகப் பதிவுசெய்யும் கதையாக 'இவர்களும் மனிதர்கள்' என்ற கதை விளங்குகின்றது. இக்கதை 'வீரமணி' என்ற பாத்திரத்தைச் சுற்றியே நகர்த்தப்படுகின்றது. றப்பர் மரம் வெட்டச் சென்ற வீரமணியின் மேல் றப்பர் மரமே விழுந்து விடுகின்ற துயர்தோய்ந்த வாழ்வை இக்கதைப் பதிவுசெய்கின்றது. இக்கதையில் வரும் ஆசிரியர் என்ற பாத்திரம் முற்போக்குக் குணமுடைய பாத்திரமாகவும், தொழிலாளர்களின் விடுதலையை அவாவி நிற்கும் பாத்திரமாகவும் அமைந்துள்ளமை மனங்கொள்ளத்தக்கது. இதனை ஆசிரியர் நிகழ்த்தும் உரையாடல்களே வெளிப்படுத்துகின்றன. "ஒரு தொழிலாளி வேலை செய்கின்ற நேரம் ஏற்பட்ட விபத்துக்கு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக லொறி கொடுக்க மாட்டேன்னு சொன்னா அது எவ்வளவு பெரிய அநியாயம். என்கிட்ட இப்ப முப்பது ரூபாதான் இருக்கு. இதவச்சிக்கங்க. றோட்டுக்கு தூக்கிட்டு போய் எப்படிச்சரி பஸ்ஸில வச்சி, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்க. நான் அந்திக்கு வாரேன்" என்று

ஆசிரியர் பணத்தைச் சண்முகத்திடம் கொடுத்தார்,'' (மேலது) என கதாசிரியர் பதிவுசெய்கிறார்.

**III. இனக்கலவரங்கள் பற்றிய கதைகள்**

இலங்கையில் மிக நீண்ட காலமாக இடம்பெற்ற இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் தமிழ்ச் சமுதாயத்தின் அசைவியக்கத்தில் மிகப் பாரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தின. இலங்கையில் இனங்களுக்கிடையிலான முரண்பாடு ஆயுத வடிவம் பெற்றபோது, தமிழ்ப் பேசும் மக்கள் என்றவகையில் பெருந்தோட்டத் தமிழர்களும் சிங்கள பெருந்தேசிய வாதிகளால் தாக்கப்பட்டார்கள். திட்டமிட்ட வகையில் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. அத்தோடு, சிறுபான்மை சமூகங்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பனவும் அதிகளவான தாக்கத்தை ஏற்படுத்தின (நு.ஃ.மான்,). பெருந்தோட்டத்துறைக்குள் பெரும்பான்மை இனத்தின் மத்தியில் வாழ்ந்த மக்கள் வெவ்வேறு வகைகளில் தாக்கப்பட்டார்கள். இராணுவத்துக்கும் தமிழ் விடுதலை போராளிகளுக்கும் இடையில் நடைபெற்ற ஆயுதப் போராட்டம் பெரும்பான்மை இன்னங்களுக்கு மத்தியில் வாழ்தவர்களை வெகுவாக பாதித்தது. இவ்வகையான பாதிப்புக்களை எதிர்நோக்கிய பிராந்தியங்களுள் மாத்தளைப் பிராந்தியமும் ஒன்று. மாத்தளைப் பிராந்தியத்தில் வாழ்ந்த தமிழ்மக்கள் இனக்கலவரங்களால் எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டார்கள் என்பதை சிறுகதைகளாக உருவாக்கியவர்களுள் மலரன்பன் தனித்தவமானவர். அவரது தார்மீகம், நந்தாவதி, தமிழச்சாதி முதலான கதைகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. ''இனக்குரோதம், வகுப்புவாதவெறி இவற்றின் மத்தியிலும் ஆங்காங்கு உழைக்கும் மக்களின் உணர்வு வர்க்க அடிப்படையில் தோய்ந்ததாக இருக்கமுடியும் என்பதையும் மலரன்பன் காட்டியுள்ளார். தார்மீகம் என்ற கதை, அஞ்சலைப்பாட்டியின் மனிதாபிமான தர்மத்தைச் சிறப்பாகக் காட்டும் அதேவேளையில், பொடி அப்புஹாமி என்ற சிங்களத் தொழிலாளியின் வர்க்க உணர்வையும் ஒரு மின்னற் கீற்றாகக் காட்டுவதாய் உள்ளது. ''இந்தாப் பாருங்க இங்க உள்ளவங்க எல்லாம் தோட்டத்தில பாடுபட்டு கால்வயிறு, அரைவயிறு கஞ்சிகுடிக்கிறவங்க. ஒருபாவமும் செய்யாத இவர்கள ஒன்னும்செய்யவேனாம்…. நான் தமிழன் பக்கம் சேரலடா. நியாயம் பக்கம் சேர்ந்திருக்கேன்'' என்று சிங்களக் காடையர் கூட்டத்திற்குக் கூறும் அப்புஹாமியும் நமது நாட்டு யதார்த்தத்தில் ஒரு அம்சம் என்பதை மலரன்பன் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதே'' (கைலாசபதி, க. : 1980 ). திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட இனவெறி தாக்குதல்களின் கோரமுகத்தைச் சித்திரிப்பனவாக நந்தாவதி, தமிழச்சாதி ஆகிய கதைகளும் அமைகின்றன. இன்றைய இனத்துவ சிக்கல்களை மையமாகக் கொண்ட கதைகள் தமிழச்சாதி மற்றும் நந்தாவதி என்பவை. நந்தாவதி கதையில் இடம்பெறும் மேல்வரும் உரையாடல் இனமுரண்பாட்டின் கொடூரமுகத்தைக் காட்டுகின்றது.

“பணிய கொலனிக்கு சீல் வைத்த பிணப்பெட்டியொன்று வருதாம். ஈரப்பலா மரத்து வீட்டு சுனில் பாவம் நல்ல பொடியன்” பியசேன.

“எங்கட பொடியனுகள் யுத்தத்தில சாகுறானுக. இங்க தோட்டத்து லயத்தில உள்ளவனுக ஜொலியா இருக்கானுக. இந்தா இதரெண்டு தம் அடிச்சிப்பாரு…” (மலரன்பன், 2008:71).

‘மாத்தளை என்றால் என்ன வவுனியா என்றால் என்ன வெயில் வெயில் தான்! என்ற ஆரம்ப வசனத்தையும் இறுதி வசனத்தையும் கொண்ட தமிழச்சாதி என்ற கதை தமிழர் என்ற அடிப்படையில் மலையகமும் வடகிழக்கும் எதிர்நோக்குகின்ற பிரச்சினையைச் சுட்டிக்காட்டுகின்றது (தில்லைநாதன், 2008). இலங்கையில் இனங்களுக்கிடையே நடைபெற்ற முரண்பாடுகள் மலையக மக்களை எவ்வாறெல்லாம் பாதித்தன என்பதை கருவாகக் கொண்டு இலக்கிய ஆக்கம் செய்த ஒருசிலருள் மரலன்பனும் முக்கியமானவர். இவ்வகையான உள்ளடக்கத்தை அடிப்படையாகக் மு. சிவலிங்கம் எழுதிய கதைகளும் சுட்டிக்காட்டத் தக்கவை.

## IV. சிங்கள கொலனிகளில் தொழில்புரியும் மக்களின் நிலை

பெருந்தோட்டங்களை அண்டியுள்ள கொலனிகளில் கூலிவேலைச் செய்யும் பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் தமது சிறுகதைகளின் ஊடாக மலரன்பன் பதிவுசெய்துள்ளார். றப்பர் தோட்டத்திலும், தேயிலைத் தோட்டத்திலும் நிலவிய வேலையில்லா பிரச்சினை கொலனிகளில் வேலைத்தேடிச் செல்லவேண்டிய நிலையை ஏற்படுத்தியது. வறுமையும் உணவுக்காகப் போராடவேண்டிய நிலையும் கொலனிகளில் வேலை செய்யவேண்டிய சூழ்நிலையைத் தோற்றுவித்தது. இவ்வகையில் மலரன்பனின் அக்கினிக் குஞ்சுகள் என்ற கதை மிக முக்கியமானது.

“ எங்க வூட்டுக்கு அடுத்த வீட்டு ராமு அவங்க அம்மா கூட நாட்டுக்கு நெல்பொறக்க போயிட்டான்…” சரோஜா கூறினாள்.”

“நாட்டுல நெல் பொறக்கினா புடிக்க மாட்டாங்களா” சாமித்துரை கேட்டான்.

“வயல்ல நெல் அறுத்தோடன தப்பித் தவறி ஒவ்வொரு நெல் கெடக்கும் அத ஒன்னு ஒன்னா வயல்காரனுக்குத் தெரியாம பொறக்கி எடுத்துக்கிட்டு வருவாங்களாம். வயல்காரன் கண்டா நெல்ல புடுங்கிடுவானாம்…….” (மேலது)

நந்தாவதி கதையில் சிங்கள கொலனியில் திப்பிலி பூவில் வடிகின்ற பதநீரை எடுக்கும் தொழில்முறை குறித்த பதிவையும் காணமுடிகின்றது. இவ்வகையான தொழில்முறைகளையும் அதற்கள் இடம்பெறும் மோதல்களையும் பிரச்சினைகளையும் சிறுகதைவெளிக்குள் கொண்டுவந்ததிலும் மலரன்பன் தனித்துவம் பெறுகின்றார்.

இக்கதையில் வரும் மேல்வரும் சித்திரிப்பு இங்கு நோக்கத்தக்கது. 'கொலனிக்கு அடுத்துள்ள கிராமத்தில் பழைய 'ஆராய்ச்சி மாத்தியா' வின் காணியில் சில திப்பிலி மரங்களை குத்தகைக்கு எடுத்துக்கொண்டான். திப்பிலி பூவில் வடிகின்ற பதநீரில் பாதி மரச் சொந்தக்காரனுக்கும் மீதி இவனுக்கும் என்று ஒப்பந்தம்'' (மலரன்பன், 2008: 68)

**V. மத்தியக் கிழக்கு நாடுகள் நோக்கிய நகர்வும் பெண்களும்**

பெருந்தோட்டப் பகுதிகளில் நிலவிய வேலையில்லாப் பிரச்சினையும், வறுமையும் பெருந்தோட்டத்துறையிலுள்ள பெண்களை மத்திய கிழக்குநாடுகள் வரைக்கும் கொண்டுச் சென்றது. மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுவேலை செய்வதற்கான பணிப்பெண்களாகவே சென்றார்கள். எனினும், அங்கும் பல்வேறு விதமான அடக்குமுறைகளுக்கு ஆளாகின்றனர். தொழில் ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் கொடுமைக்குள்ளாகின்ற நிலையும் இடம்பெற்றது: பெறுகின்றது. வீட்டு எசமானரின் ஆசைகளுக்கு இனங்காக பெண்கள் மிக மோசமாக தாக்கப்படுவதும், கொலைச்செய்யப்படுவதுமான நிகழ்வுகள் நடந்தவாறே இருக்கின்றன. இவ்வகையான பிரச்சினைகளைக் கருவாகக் கொண்ட கதைகளை எழுதியவராகவும் மலரன்பன் விளங்குகின்றார். அவ்வகையில் அவரது சாமிவரம், பாலைவனம் முதலான கதைகள் மிக முக்கியமானவை. சாமிவரம் என்ற கதை பல வகையிலும் சிறப்புக்குரியது. பெருந்தோட்டப் பகுதியிலுள்ள பாடசாலையில் கல்வி கற்று, நல்ல பெபேறுகளைப் பெற்ற தமிழரசி ஆசிரியப் பயிற்சிக்கான நேர்முகப் பரீட்சைக்குச் சென்றபோது தாய் தந்தை தோட்டத்தில் வேலைச் செய்ததற்கான ஆதாரம் இல்லாத காரணத்தினால் அவளுக்கு ஆசிரியத்தொழில் இல்லாமல்போகின்றது. தனது இலட்சியமே ஆசிரியர் தொழில் புரிவதுதான் என்றுநினைத்த தமிழரசி இறுதியில் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்புரிய செல்கிறாள். இக்கதையில் இடம்பெறும் இன்னொரு முக்கிய செய்தி, தமிழரசின் அக்கா ஏற்கனவே வெளிநாட்டுக்குத் தொழில்புரியச் சென்று அங்கு கொலைசெய்யப்பட்டவள் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கதையின் இறுதிப் பகுதியில் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுவது மனங்கொள்ளத்தக்கது:

> 'இருக்கவே இருக்கிறது மத்திய கிழக்கு'
>
> தமிழரசியும் போவாள் பணிப்பெண்ணாக!
>
> மூன்று வருடங்களின் பின்னர் முற்றும் துறந்தவளாக வள்ளிமயிலாய் திரும்பி வருவாளா!
>
> அக்கா கோவிலாவைப் போல பெட்டிக்குள் வருவாளா!
>
> அது யாருக்குத் தெரியும்! (மலரன்பன், 2008: 7).

பாலைவனம் என்ற கதையும் இவ்வகையில் சுட்டிக்காட்டத்தக்கது. மத்திய கிழக்கு நாட்டுக்குச் சென்ற தம்மிக்கா என்ற பெண் அங்கு எதிர்நோக்கிய பாலியல் ரீதியான தொல்லைகளை வெளிப்படுத்தும் கதையாகவே பாலைவனம் திகழ்கின்றது.

'இந்த வீட்ல தகப்பனும் மகன்மார் ரெண்டுபேருமாக மூன்று தடியனுக இருக்கானுக. கழுகுமாதிரி பாக்கிறானுக. ஒருநாள் பட்டப் பகல்ல நான் தனியா வேலை செய்துக்கிட்டிருக்கிற நேரம் மூத்த மகன் தாடிக்காரன் என் மார்பப் புடிச்சான். நான் விலக்கிக்கிட்டேன். இன்னொரு நாள்…'' (மேலது, 90).

**vi. விரிவுபெறும் கதைப்பொருளும் கதைக்களமும்**

மலரன்பனின் பெரும்பாலான கதைகளின் ஊடுபாவாக பெருந்தோட்டத்துறையில் நிலவுகின்ற வறுமையே காணப்படுகின்றது. 'இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள கதைகள், மலையகப் பிரதேசத்தையும் அப்பிரதேசத்திற்கென அமைந்த வாழ்க்கைச் சூழலையும் அச்சூழலில் தொழில் புரியும் மக்களை அழுத்தும் பிரதான பிரச்சினைகளையும் காட்டுவதை நோக்கமாகக் கொண்டவை. வளங்களும் வாய்ப்புக்களும் முறையாகப் பங்கிடப்படாத ஒரு சமுதாய அமைப்பில் வறுமை தோற்றுவிக்கும் அவலங்களும் முரண்பாடுகளும் போராட்டங்களும் காட்டப்படுகின்றன' (தில்லைநாதன் : 1989). பெருந்தோட்டத்துறைக்குள் மேலெழுந்த தொழிலின்மை பிரச்சினையினால் மக்கள் எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டார்கள் என்பதையே அவரது அக்கினிக் குஞ்சுகள் கதை வெளிப்படுத்துகின்றது. தொழிலின்மை வறுமையையும், உணவுக்காகப் போராட வேண்டிய நிலையையும் தோற்றுவிக்கின்றது. பசியின் கொடுமையில் சிக்கித்தவிக்கும் சிறுவர்களின் அவலநிலையை அக்கினிக்குஞ்சுகளாக வடிக்கிறார், ஆசிரியர். கண்டாக்டர் வீட்டு மரவள்ளிக் கிழங்குகளைத் திருடி, தமது பசியைப் போக்கவேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டவர்கள், மிகக் கொடூரமாகத் தாக்கப்படுகின்ற யதார்த்தத்தைக் கதை பதிவுசெய்கின்றது. இவ்வாறான சமுதாயச் சூழலைத் தமிழ்ச் சிறுகதை உலகுக்குக் கொண்டுவந்தவர்களுள் மலரன்பன் முக்கியமானவர். அக்கினிக்குஞ்சுகள் கதையில் இடம்பெறும் பின்வரும் சித்திரிப்பும் கதாசிரியரின் சமுதாய நோக்கைக் காட்டுகின்றது எனலாம்.

> ''கேட்டுக்க சுப்பு நான் எதுக்கு தெரியுமா? மரவள்ளி உண்டாக்கினேன். தோட்டத்திலேயும் சாப்பாட்டுக்குச் சாமான் உண்டாக்கனுமின்னு கவண்மெண்ட்ல சொன்னாங்க தொர ஒவ்வொரு ஸ்டாஃபும் ஏதாவது உண்டாக்கினும்னு சட்டம்போட்டாரு. தொர கோவிச்சுக்கிருவாரென்றுதான் நான் மரவள்ளித் தோட்டம் போட்டேன். பிச்சக்கார பயல்களுக்கு திங்க இல்லேங்கிறதுக்காக நான் மரவள்ளித்தோட்டம் உண்டாக்க இல்ல…….'' என உறுமியபடி சோடியம் ஆர்சனைட் மருந்தை மீதியாய் நின்ற மரவள்ளித்தூரில் தெளிக்கத் தொடங்கினான்'' (மலரன்பன், 12).

இக்கதையில் வரும் சிவராசா, வீரமணி முதலான சிறுவர்கள் அக்கினிக்குஞ்சுகளாக உருமாறும் சமுதாயச் சூழலை முன்னிறுத்துவது பாத்திரங்களின் உரையாடல்களில் வெளிப்படுகின்றது. ''நான் கெட்டபோல் கொண்டு வந்திருக்கேன். நாய் வந்தால் மண்டையை ஒடைப்பேன் பயப்படாதீங்க'' என்று சிவராசன் கூறுவதும், ''வேலைக்காரன்

இல்ல எவன் வந்தாலும் பயப்படாம ஒளிஞ்சி கிட்டு இதவுட்டு வீசினா வயிறு கிழிஞ்சு போயிடும்'' என்று வீரமணி கூறுவதும் அக்கினிக்குஞ்சுகள் என்ற கதையின் தலைப்புக்கு மேலும் வலிமையூட்டுவதாகவும் அமைந்துவிடுகின்றது.

மாத்தளைப் பிராந்தியத்தின் சமூக அடையாளங்களுள் ஒன்று மாத்தளைக் கோயில். அக்கோயிலை மையமாக வைத்துக்கொண்டு மலரன்பன் தீட்டும் சித்திரம் 'ஞானரதம்' என்ற கதையாக உருவாகின்றது. மாத்தளைத் தேர் பார்ப்பதற்குச் செல்லும் கந்தசாமியின் குடும்பத்தை வைத்துக்கொண்டு மனித மனத்தின் அசைவுகளை அலையவிடுகின்றார், ஆசிரியர். இக்கதையில் வரும் சின்னவன் என்ற பாத்திரம் மறக்கமுடியாத பாத்திரமாக வார்க்கப்பட்டுள்ளது. ஒரு கால் ஊனமான சின்னவன் மாத்தளைத் தேர் பார்க்கச் சென்றபோது காணாமல் போய்விடுகின்றான். தந்தையான கந்தசாமியின் மூலமாகவே சின்னவனின் உடல் ஊனம் சுட்டிக்காட்டப்படுகின்ற அவலநிலை வாசகனை மௌனிக்கச் செய்துவிடுகின்றது. மனித உறவுகளுக்கிடையே முட்டிமோதிக் கொள்ளும் உணர்ச்சிகளை பதிவுசெய்யும் கதையாகவும் ஞானரதம் மிளிருகின்றது. ஞானரதம் புறத்தே ஓடுகிறதா அல்லது அகத்தே ஓடுகிறதா என்பதைச் சொல்லாமல் சொல்லும் கதையே மலரன்பன் ஓடவிடும் ஞானரதம் கதையாகும். 'கறிவேப்பிள்ளை' கதையும் மிக முக்கியமானது. மலையகச் சூழலில் பொருளாதாரச் சுரண்டலும் உழைப்புச் சுரண்டலும் எவ்வாறு காணப்படுகின்றன என்பதற்கு நல்ல உதாரணம் கறிவேப்பிள்ளை கதையாகும். கதையின் தலைப்பே கதைப் பொருண்மையைக் காட்டிவிடுகிறது. மலையகச் சமூகச் சூழலில் கண்டாக்கையாவின் அதிகாரமுகத்தையும் உழைப்புச் சுரண்டலையும் வெளிப்படுத்திய கதையாக இதனைச் சொல்லலாம். கறிவேப்பிள்ளை கதையில் நடமாடும் பச்சைமுத்து என்ற பாத்திரம் ஒரு சமுதாயத்தின் குறிகாட்டியாகவும் அமைந்துவிடுகின்றது.

மலரன்பனின் கோடிச்சேலைத் தொகுப்பில் இடம்பெறும் வானவில், உறவுகள், பார்வதி, சுயம்வரம் முதலான கதைகளும் கதாசிரியரின் படைப்பாளுமையையும் அவரது படைப்பு லகத்தையும் காட்டுகின்றன. இவரது படைப்புலகம் வளமானதாக அமைந்திருப்பதற்கு முக்கிய காரணம் அவரது மொழிக்கையாளுகையும் கதைசொல்லும் முறைமையும் ஆகும். மலையகச் சிறுகதைகள் தமக்கேயுரிய உற்பத்தி உறவுகளின் பின்னணியிலிருந்து உருபெறுகின்றன. அந்த உற்பத்தி உறவுகளின் அடியாகவிருந்தே இலக்கிய படிமங்களும் உருவாக வேண்டும். மலையகத்தில் சிறுகதையாசிரியர்களாக முகிழ்ந்த பலரிடம் இல்லாத ஒரு சிறப்புக்கூறு மலரன்பன் கதைகளில் விரவிவந்துள்ளது. அதுதான் அவரது பிராந்தியத்துக்குரிய படிமங்களைக் கதையின் ஓட்டத்திற்கேற்ப பயன்படுத்தும் விதமாகும். அவரது கதைகளிலிருந்து சில எடுத்துக்காட்டுக்கள் வருமாறு:

> ''நிலவு ஊமையாய் காய்ந்துக்கொண்டிருந்தது. சலவைக்குப் பின்னர் சாயம் மங்கிப்போன பண்டிகை ஆடையிலுள்ள பூக்களைப்போல நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிந்தன.''

"இதைப்பற்றிப் பிரச்சினையைக் கிளப்பினால் 'ஒட்டுப்பாலாய்' இழுபடுமே ஒழிய, ஒரு நல்ல முடிவு வராதென்பதெல்லாம் பழைய கதைகள்!"

மஞ்சள் பூசி முகம் கழுவியிந்த வானத்தின் நெற்றியில் சூரியன் சிகப்புத் திலகம் வைக்க, நாணத்தினால் செம்மைபடரும் கீழ்வானம் தூரத்தில்... விரித்துவிட்ட மேகக்கூந்தலுடன் நீர் சொட்ட சொட்ட ஈரத்துகிலுடன் நிற்கும் தேயிலை மலைகள்.

மலையுச்சியில் வெள்ளித்தகடாய் மின்னும் தேயிலை ஸ'டோர், ஸ்டோரை ஒட்டி பெரிய டீ மேக்கர் பங்களா. அதிலிருந்து ஒரு இரண்டு முடக்குத்தள்ளி ஒரு சிறிய குன்றில் சிகப்பு வண்ணம் பூசப்பட்ட கூரையுடன் தனியாகத் தெரியும் சின்னபங்களா..

இவ்வாறான சித்திரிப்புமுறை குறிப்பிட்ட கதையைக் கட்புலகலைநெறியாகக் கொண்டு வந்து விடுகின்றது எனலாம்.

**v. முடிவுரை**

மலையகச் சிறுகதைப் பரப்பில் மலரன்பனின் கதைகள் பலவகைகளிலும் சிறப்புப் பெறுகின்றன. குறிப்பாக மலையகச் சிறுகதைவெளியில் புதிய படைப்புவெளிகளை கொண்டுவந்தவராக அவரை அடையாளப்படுத்த முடியும். அவ்வகையில் அவரது றப்பர் தோட்ட வாழ்வுமுறை பற்றிய கதைகள் மிக முக்கியமானவை. உதாரணமாக இலையுதிர் காலத்து மரங்கள், இவர்களும் மனிதர்கள், கோடிச்சேலை முதலான கதைகள் றப்பர் தோட்ட வாழ்வியலை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. அதுபோலவே, இனமுரண்பாடுகள் நிலவி காலப்பகுதிகளில் பெருந்தோட்டத்துறையிலுள்ள மக்கள் எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டார்கள் என்பதை வெளிப்படுத்தும் கதைகளுள் தார்மீகம், நந்தாவதி, தமிழச்சாதி முதலானவைகள் தனித்து நோக்கத்தக்கவை. பல்லின சமூகப் பண்பாட்டுச் சூழலில் வாழ்ந்த பெருந்தோட்ட மக்கள் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட இனவன்முறைகளால் எவ்வாறு பாதிப்புக்குள்ளானார்கள் என்பதை இலக்கியவெளிக்குள் கொண்டுவந்ததிலும் மலரன்பனுக்கு முக்கிய இடம் உண்டு. மேலும், சிங்கள கொலனிகளில் தொழில்புரிவதற்காகச் சென்றவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளைக் கருவாகக் கொண்ட சிறுகதைகளையும் மலரன்பன் எழுதியுள்ளார். இவ்வகையான கதைகள் மலரன்பனூடாகவே வெளிப்படுத்தப்பட்டமையைக் காணமுடிகின்றது. மலரன்பனின் ஒருசில கதைகளில் சிங்கள கொலனியில் தொழில்புரியும் பெருந்தோட்ட மக்கள் பற்றிய பதிவுகள் இடம்பெறுகின்றமை மனங்கொள்ளத்தக்கது. மேலும், பெருந்தோட்டத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்ற மலையகப் பெண்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளையும் சவால்களையும் தமது சிறுகதைகளுடாக வெளிப்படுத்தியுள்ளார், மலரன்பன். இவ்வகையான கதைக்கருவும் கதைக்களமும் மலையகச் சிறுகதைகளின் பன்முகத்தன்மையைக் காட்டும் அதேவேளை, மலையகச்

சிறுகதைப் பரப்பில் மாத்தளை மலரன்பனின் தனித்துவமான படைப்புவெளியையும் அடையாளப்படுத்துவதாக அமைகின்றது எனலாம்.

**உசாத்துணைகள்**

நு.்.மான், எம். ஏ. (2017) **சமூக யதார்த்தமும் இலக்கியப் புனைவும்**, காலச்சுவடு வெளியீடு.

மலரன்பன், (1989) **கோடிச்சேலை**, மாத்தளை : சுஜாதா பதிப்பகம்.

மலரன்பன், (2008) **பிள்ளையார் சுழி**, கொழும்பு : கொடகே சகோதரர்கள்.

தெளிவத்தை ஜோசப், (2000) **மலையகச் சிறுகதை வரலாறு**, துரைவி வெளியீட்டகம்.